தினமணி

# மக்காச்சோளம் "தாக்கும் பூச்சிகளும் தடுக்கும் வழிகளும்'

First Published : 17 Feb 2011 12:40:16 AM IST



காஞ்சிபுரம்: மக்காச்சோளத்தை பூச்சித் தாக்குதலில் இருந்து காப்பாற்றிவிட்டால் குறைந்த முதலீட்டில், குறைந்த நாளில் அதிக லாபம் பார்க்க முடியும்.

÷தற்போது தமிழ்நாட்டில் உணவு மற்றும் தீவனத் தேவைக்காக பற்றாக்குறை உள்ளது. விவசாயிகள் இந் நேரத்தில் மக்காச்சோளம் பயிரிடுவதன் மூலம் நல்ல லாபத்தை பெற முடியும். நல்ல மகசூல் கிடைக்க உயர் விளைச்சல் தரும் வீரிய ஒட்டு ரகங்களை விவசாயிகள் பயிர் செய்ய வேண்டும்.

÷மக்காச்சோளம் 90 முதல் 110 நாள்களிலேயே விளைந்து பலன் கொடுக்கும். மக்காச்சோளத்தை பூச்சித் தாக்குதலில் இருந்து காத்துக் கொண்டால் விவசாயிகள் கூடுதல் லாபம் பெறமுடியும்.

÷குருத்து காயும் நோய் வகை: மக்காச்சோளத்தை தாக்கும் பூச்சிகளை பொறுத்தவரை ஒரு வகையான ஈ இலைகளில் முட்டையிடும். முட்டையில் இருந்து வெளிவரும் புழுக்கள் தண்டைக் குடைந்து செல்லும். ÷இதனால் நடுக்குருத்தின் அடிப்பாகம் பாதிக்கப்படும். முழுச் செடியும் காய்ந்து போவதற்கான வாய்ப்பும் உண்டு. இப்பூச்சி பெரும்பாலும் ஒரு மாத பயிரைத் தாக்கும். மீன், கருவாட்டு பொறியை வைத்து இப் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். ஒரு ஹெக்டேருக்கு 12 அல்லது 13 என்ற அளவில் அமைக்க வேண்டும்.

÷இலைகாயும் நோய் வகை: இந்த நோய் மக்காச்சோளத்தை அதிகம் தாக்கும் நோய் ஆகும். இதை அடிச்சாம்பல் நோய் என்று விவசாயத் துறையினர் கூறுகின்றனர்.

÷இந்நோய் தாக்கினால் இலைகளின் அடிப்பாகம் வெண்மையாக மாறும். இலைகள் காய்ந்துவிடும். இலைகளின் நரம்புகள் கிழிந்து விடும். இலை நார் போலக் காணப்படும். ÷இதைக் கட்டுப்படுத்த இந்நோய் தாக்கிய செடிகளை அகற்றி அப்புறப்படுத்த வேண்டும். 0.2 சதவீத மெட்டலாக்சில் மருந்தைத் தெளிக்க வேண்டும்.

÷பூச்சித் தாக்குதல்களை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து வேளாண்மைத் துறை அதிகாரிகள் சிலரிடம் கேட்டபோது அவர்கள் கூறியது:

÷பூச்சிகளைக் கட்டுப்படுத்த விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதை நேர்த்தி குறித்த அப்பகுதி விவசாயத் துறை வல்லுநர்களை கேட்டு தெரிந்து கொள்ளலாம். முன் பருவத்திலேயே விதைக்க வேண்டும்.

÷பூச்சியால் தாக்கப்பட்டு குருத்து காய்ந்த செடிகளை உடனடியாக அகற்ற வேண்டும். மக்காச்சோளத்தைத் தாக்கும் பூச்சிகளுக்கான எதிர்பூச்சிகளான ஊக்குவிப்பதன் மூலம் பூச்சி தாக்குதலை கட்டுக்குள் கொண்டு வரலாம் என்றனர்.

÷இதுகுறித்து விவசாயத்துறை இணை இயக்குநர் விஜயகுமாரிடம் கேட்டபோது, காஞ்சிபுரம் மாவட்டத்தில் மதுராந்தகம், அச்சிறுப்பாக்கம் வட்டத்தில் அதிகம் பயிரிடப்படுகிறது. அவர்களுக்கு உரிய ஆலோசனைகள், பூச்சிக் கட்டுப்படுத்தும் முறைகள் விவசாயத் துறை அதிகாரிகளால் வழங்கப்பட்டு வருகிறது என்றார்.

**பச்சைத் தங்கம் பயிரிடலாமே!**

First Published : 17 Feb 2011 12:37:33 AM IST



கடலூர் அருகே தியாகவல்லி கிராமத்தில், மணிலா ஊடுபயிராகப் பயிரிடப்பட்டு உள்ள, கல் மூங்கில்.

கடலூர்: மூங்கில் இலைமேலே தூங்கும் பனி நீரே என்ற சங்க காலப் பாடல் வரிகளை பலரும் அறிந்து இருப்பார்கள்.

÷கவிஞர்களின் கற்பனைக்கு வளம் சேர்க்கும் மூங்கில், இன்று விவசாயிகளின் வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் பயிராக மாற்றப்பட்டு வருகிறது. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில்

மூங்கில் பன்னெடுங் காலமாக பயிரிடப்படுகிறது.÷இந்தியக் காடுகளின் பரப்பளவில் மூங்கில் 12.8 சதவீதம் காகித ஆலைகள், ரேயான் தொழிற்சாலைகளிலும் மூலப்பொருளாக, பெருமளவுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

வலுவாகவும், நீண்டகாலம் கெடாமலும் இருப்பதால், வீடு கட்டவும், கால்நடைத் தீவனங்கள் தயாரிக்கவும், விவசாயத் தொழில்களுக்கும், மேஜை, நாற்காலிகள், கலைப் பொருள்கள் தயாரிக்கவும் பயன்படுகிறது. ÷உலகச் சந்தையில் மூங்கில் பொருள்களின் மதிப்பு ஆண்டுக்கு 10 மில்லியன் டாலராக உள்ளது. 2015-ம் ஆண்டில் 20 மில்லியன் டாலராக உயரும் என்கிறார்கள். இந்தியாவில் மூங்கில் உற்பத்திப் பொருள்களின் மதிப்பு ரூ.6,505 கோடி. மூங்கில் தேவை பெருமளவுக்கு அதிகரித்து வருகிறது.

÷எனவே மூங்கிலை, தமிழ்நாட்டில் வணிக ரீதியாக சாகுபடி செய்ய தோட்டக்கலைத் துறை நடவடிக்கை எடுத்து வருவது விவசாயிகளிடம் நல்ல வரவேற்பைப் பெற்று இருக்கிறது. மூங்கில் உற்பத்தியைப் பெருக்கி, விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கம்.

÷விவசாய வேலைகளுக்கு ஆள்கள் கிடைப்பது இல்லை. தண்ணீர் பற்றாக்குறை, மின்சாரத்தில் நிலையற்ற தன்மை காரணமாக விவசாயம் உபதொழிலாக மாற்றப்படுவதால், பலர் தங்கள் நிலங்களில் சவுக்கு மற்றும் தைல மரங்களை பயிரிடுவது அதிகரித்து வருகிறது. சவுக்கு, தைல மரங்களைவிட மூங்கில் அதிக வருவாய் தரக்கூடிய பயிராகவும், 3 மடங்கு வளர்ச்சி விகிதம் அதிகமாகவும் உள்ளது. ÷வடகிழக்கு மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட முள் இல்லாத மூங்கில் வகைகளை, பல்வேறு தட்பவெப்ப நிலங்களில் விஞ்ஞானிகள் ஆய்வு செய்து, 4 ரகங்களை தமிழ்நாட்டில் பயிரிட ஏற்ற மூங்கில்களாக அறிவித்துள்ளனர். அவை பேம்பூஸô நியூட்டன்ஸ், பேம்பூஸô பலகுவா, வேம்பூஸô வல்காரிஸ், பேம்பூஸô டுல்டா ரகங்கள். தமிழ்நாட்டில் வறண்ட பகுதிகளில் கல் மூங்கில், ஈரச் செழிப்பான பகுதிகளில் பொந்து மூங்கில் அதிகம் பயிரிடப்படுகிறது.

÷மூங்கிலை நடவு செய்ய, நாற்றுவிட்டு நடுவது, மூங்கில் கிழங்கை வெட்டி எடுத்து நடவு செய்தல், மூங்கில் கழிகளை கிழங்குடன் வெட்டி எடுத்து நடுதல், திசு வளர்ப்பு முறை, மூங்கில் கழிகள் மற்றும் பக்கக் கிளைகளை முளைக்க வைத்து நடுதல் எனப் பல வழிமுறைகள் உள்ளன. நாற்றுவிட்டு நடவு செய்தல் சிறந்த முறையாகக் கருதப்படுகிறது. ÷கோடைகாலங்களில் 10 நாள்களுக்கு ஒருமுறை பாத்திக்கு 25 முதல் 50 லிட்டர் வரை நீர ஊற்றினால் நல்ல பலன் கிடைக்கும். மூங்கிலை 200 வகையான பூச்சிகள் சேதப்படுத்தும். என்றாலும் 10-க்கும் குறைவானவைகளே முக்கியமானவை. எனவே ஒருங்கிணைந்த பூச்சி, நோய்க் கட்டுப்பாடு முறைகள் தேவை.

÷பராமரிப்புக்கு ஏற்ப நட்ட 4-ம் ஆண்டு முதல் மூங்கில் கழிகளை வெட்டி அறுவடை செய்யலாம். கல் மூங்கில் ஹெக்டேருக்கு 2,400 கழிகளும், பொந்து மூங்கில் ஹெக்டேருக்கு 1,662 கழிகளும்

கிடைக்கும். மூங்கில் சாகுபடி மூலம் ஏக்கருக்கு 6-ம் ஆண்டு ரூ. 25,500 ம், 7-ம் ஆண்டு ரூ. 30,800ம், 8-ம் ஆண்டு ரூ. 36,200ம், 9 முதல் 15-ம் ஆண்டு வரை ரூ. 39,600 வருவாய் கிடைக்கும் என்று வேளாண் துறை தெரிவிக்கிறது. 5 ஆண்டுகளுக்கு மொத்தச் செலவு ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம்.

÷இதுகுறித்து கடலூரை அடுத்த தியாகவல்லி விவசாயி சாமி கச்சிராயர் கூறுகையில், மூங்கில் விவசாயத்துக்கு ஹெக்டேருக்கு 2 ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ. 8 ஆயிரம் அரசு மானியம் வழங்கப்படுகிறது. தியாகவல்லி, திருச்சோபுரம் பகுதிகளில் 5 ஏக்கரில் கல் மூங்கில் பயிரிட்டுள்ளேன். சவுக்கு மற்றும் தைல மரச் சாகுபடியைவிட மூங்கில் லாபகரமானது. விரைவில் வளரும். 4 ஆண்டுகள் வரை மணிலா, அவரை, முள்ளங்கி, தர்ப்பூசனி போன்றவற்றை ஊடு பயிராகச் சாகுபடி செய்யலாம். 5 ஆண்டுகளுக்குப் பின் ஏக்கருக்கு ரூ. 60 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன் என்றார்.

**18-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 16 Feb 2011 12:05:45 PM IST

வேலூர், பிப். 15: வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (பிப்ரவரி 18) நடைபெறுகிறது.

ஆட்சியர் செ. ராஜேந்திரன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளை மனுவாக அளிக்கலாம். கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் பதில் அளிப்பார்கள். விவசாயிகள் இக் கூட்டத்தில் பங்கேற்று தங்கள் குறைகளை நிவர்த்தி செய்துகொள்ளலாம் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**வேளாண் கருவிகள் அளிப்பு**

First Published : 16 Feb 2011 11:32:15 AM IST

வேதாரண்யம், பிப். 15: நாகை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த தகட்டூரில் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், மானிய விலையில் வேளாண் கருவிகளை நாகை மாவட்ட ஆட்சியர் ச. முனியநாதன் விவசாயிகளுக்கு அண்மையில் வழங்கினார்.

நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த நாகை மாவட்ட ஆட்சியிர் ச. முனியநாதன் ரூ. 14 லட்சத்து 22,750 மதிப்பிலான வேளாண் இடுபொருள், கருவிகளை விவசாயிகளுக்கு வழங்கி பேசினார்.

நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் இரா. முருகானந்தம், வேளாண் துணை இயக்குநர்கள் உ. ராசேந்திரன், கே. மயில்வாகணன், ஒன்றியக் குழுத் தலைவர் பத்மாவதி

செகநாதன், உறுப்பினர் வே. கோவிந்தசாமி, ஊராட்சித் தலைவர் அமிர்தகடேஸ்வரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, வேளாண் உதவி இயக்குநர் ப. மணிகண்டன் வரவேற்றார். முடிவில் உதவி வேளாண் அலுவலர் ஆர். ரவி நன்றி கூறினார்.

**மணிமுத்தாறு அணை மூடல்: நெற்பயிர் கருகும் அபாயம்**

First Published : 16 Feb 2011 01:56:24 PM IST

அம்பாசமுத்திரம், பிப். 15: நீர்மட்டம் 81 அடியாகக் குறைந்ததால் மணிமுத்தாறு அணை செவ்வாய்க்கிழமை மூடப்பட்டது. இதனால், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் மணிமுத்தாறு பிரதான கால்வாய் மூலம் பாசனம் பெறும் 10,843 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தின் பிரதான அணைகளான பாபநாசம், மணிமுத்தாறு அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை போதிய அளவு பெய்யாததால் அணைகள் நிரம்பவில்லை.

இம் மாவட்டத்தில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் சராசரியாக 485 மி.மீ. மழை பெய்யும். 2010-ம் ஆண்டு இப் பருவத்தில் சராசரியையும் தாண்டி 515 மி.மீ. மழை பதிவானது. ஆனால், நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கனமழை நீடிக்காததால் நீர்வரத்து குறைந்து அணைகள் நிரம்பவில்லை.

118 அடி கொள்ளளவு கொண்ட மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் அதிகபட்சமாக 97 அடியும், 143 அடி கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணையின் நீர்மட்டம் 139 அடியும், 156 அடி கொள்ளளவு கொண்ட சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 149 அடியும் எட்டின.

இதற்கிடையே, பிசான பருவ சாகுபடிக்கு முன்கூட்டியே 2010-ம் ஆண்டு அக்டோபர் 15-ம் தேதி பாபநாசம் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இவ்விரு மாவட்டங்களில் 11 கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் 86,107 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

மணிமுத்தாறு பிரதான கால்வாயில் முதல், 2-வது ரீச் பாசனத்தில் 171 குளங்கள் மூலம் பாசனம் பெறும் 10,843 ஏக்கர் நிலங்களுக்கு 2010, டிசம்பர் 9-ம் தேதி மணிமுத்தாறு அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

நீர்மட்ட நிலவரம்: செவ்வாய்க்கிழமை (பிப். 15) நிலவரப்படி, பாபநாசம் அணையின் நீர்மட்டம் 86.55 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 81.56 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 81.30 அடியாகவும் இருந்தது.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 278 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 28 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. பாபநாசம் அணையில் இருந்து பாசனம், குடிநீர்த் தேவைக்கு 1132 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

அணை மூடல்: மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 81.30 அடியாகக் குறைந்ததால் அணை மூடப்பட்டது. அணையின் நீர்மட்டம் 81 அடியாகக் குறைந்ததால் பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்க முடியாது. எனவே, அணை மூடப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பெருங்கால் மதகு மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு மட்டும் 30 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

பயிர்கள் கருகும் அபாயம்: கடந்த ஆண்டு இதேநாளில் (2010 பிப். 15) பாபநாசம் அணையின் நீர்மட்டம் 114.40 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 128.08 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 106.98 அடியாகவும் இருந்தது. ஆனால், இந்த ஆண்டு நீர் இருப்பு வெகுவாகக் குறைந்து காணப்படுகிறது.

மணிமுத்தாறு அணை மூடப்பட்டுள்ள நிலையில், பிரதான கால்வாய் பாசனக் குளங்களில் ஓரளவு நீர் இருப்பு உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். இருப்பினும் தாமதமாகப் பயிரிட்ட பகுதிகளுக்கு மார்ச் மாதம் இறுதி வரை தண்ணீர் தேவைப்படும் எனக் கூறப்படுகிறது.

அணைகளில் நீர் குறைவாக இருப்பதால் பிசான சாகுபடிக்கு முழுமையாகத் தண்ணீர் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் போதிய நீரின்றி நெற்பயிர் கருகும் அபாயம் உள்ளது. ஏப்ரல், மே மாதங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு எழும் சூழலும் நிலவுகிறது.

**குளத்தில் குடியேறி விவசாயிகள் போராட்டம்**

First Published : 16 Feb 2011 01:55:50 PM IST

சுரண்டை, பிப். 15: சுரண்டை அருகேயுள்ள குலையநேரியில் தங்களது ஊர் குளத்துக்கு தனிக் கால்வாய் அமைக்க வேண்டும் என வலியுறுத்தி, விவசாயிகள் தங்கள் குடும்பத்தினருடன் குளத்தில் குடியேறி செவ்வாய்க்கிழமை போராட்டம் நடத்தினர்.

குலையநேரி ஊரின் வடபுறம் உள்ளது பெரியகுளம். 161.55 ஏக்கர் பாசனப் பரப்பளவு கொண்ட இக் குளத்துக்கு கருப்பாநதி பாப்பான்கால்வாயின் 13-ம் மடையில் இருந்து தனிக் கால்வாய் மூலம் தண்ணீர் வருகிறது.

கருப்பாநதி அணை கட்டப்படுவதற்கு முன்புவரை குலையநேரி குளத்துக்கு மட்டுமே பாத்தியப்பட்ட 13-ம் மடை கால்வாய்த் தண்ணீர், கருப்பாநதி அணை கட்டப்பட்ட பிறகு, அணை ஆயக்கட்டில் 48.55 ஏக்கர் பாசனப் பரப்புள்ள கள்ளம்புளி குளத்துக்கும் சேர்த்து வழங்கப்பட்டுவிட்டதாம்.

இதனால் குலையநேரி குளத்துக்கு நேரடியாக வந்த தண்ணீர், கள்ளம்புளி குளம் நிரம்பி மறுகால் வழியாக வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதனால் குலையநேரி குளத்துக்கு மழைக் காலங்களில் வந்த தண்ணீரின் அளவு படிப்படியாகக் குறைந்து இப்போது முற்றிலும் வருவது இல்லையாம்.

இதனால் குலையநேரி பெரியகுளத்தில் பெருகும் மழைநீரை நம்பி, விவசாயிகள் நெல் சாகுபடி செய்வதும், கடைசி வரை கருப்பாநதி தண்ணீர் வராமல் பயிர் கருகி நஷ்டப்படுவதும் தொடர்கதையாகிவிட்டது.

எனவே, கள்ளம்புளி குளத்துக்கு முன்பிருந்தே 13-ம் மடைக் கால்வாயை இரண்டாகப் பிரித்து கள்ளம்புளி குளத்துக்கும், குலையநேரி குளத்துக்கும் தனித்தனி ஷட்டர் அமைத்து, அங்கிருந்து 950 மீட்டர் தூரத்திற்கு மட்டும் குலையநேரி குளத்துக்கு தனிக் கால்வாய் அமைத்துத் தரக் கோரி கடந்த 33 ஆண்டுகளாக இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், இதே கோரிக்கையை வலியுறுத்தி குலேயநேரி பெரியகுளத்தில் குடியேறி சமைத்துச் சாப்பிடும் போராட்டத்தை விவசாயிகள் செவ்வாய்க்கிழமை முதல் தொடங்கியுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் குலையநேரி பெரியகுளம் விவசாயிகள் சங்கத் தலைவர் மாணிக்கம், சங்கரன்கோவில் வட்டார விவசாயிகள் சங்கத் தலைவர் குத்தாலிங்கம், கருப்பாநதி நீர்ப்பாசனக் கமிட்டி உறுப்பினர் முத்தையா உள்பட திரளானோர் கலந்துகொண்டுள்ளனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் சண்முகவேல், தேமுதிக மேற்கு மாவட்டச் செயலர் அய்யம்பெருமாள் உள்பட பல்வேறு கட்சியினர் வாழ்த்திப் பேசினர்.

கோரிக்கை நிறைவேறும்வரை போராட்டம் தொடரும் என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## ராஜராஜன் 1000 நெல் செயல் விளக்கத் திடல்கள் ஆய்வு

First Published : 16 Feb 2011 10:31:32 AM IST

காரியாபட்டி, பிப். 15: நரிக்குடி ஒன்றியம், பிள்ளையார்குளம், களத்தூர் கண்மாய் ஆயக்கட்டுப் பகுதியில் வேளாண் துறை மூலம் அமைக்கப்பட்ட ராஜராஜன் 1000 செயல் விளக்கத் திடல்கள் உலக வங்கியினரால் ஆய்வு செய்யப்பட்டது.சென்னை வேளாண் இயக்குநரக கூடுதல் இயக்குநர் (ரசாயனம்) பொன்னுச்சாமி தலைமையில் நீர்வள, நிலவள திட்ட ஆலோசகர் சந்திரகுமார், மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ராமராஜ், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ஜெயப்பாண்டியன், நரிக்குடி உதவி இயக்குநர் சக்கரவர்த்தி ஆகியோர் ஆய்வு செய்தனர். அறுவடை மேற்கொள்ளப்பட்ட செயல் விளக்கத் திடலில் மகசூல் விவரம் பற்றி விவசாயிகளிடம்

கேட்டறிந்தனர். துணை வேளாண் அலுவலர் கிருஷ்ணசாமி, உதவி வேளாண் அலுவலர்கள் ரெங்கநாதன், பார்வதி உடனிருந்தனர்.

தினமலர்

**வேளாண் இடு பொருட்கள் மானிய விலையில் வழங்கல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,00:10 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த திம்மாபுரத்தில் கிராம அளவிலான வேளாண் இடுபொருட்கள் மானியத்தில் வழங்கும் விழா நடந்தது. வேளாண் இணை இயக்குனர் ராஜன் தலைமை வகித்தார். காவேரிப்பட்டணம் வேளாண் இணை உதவி இயக்குனர் ராமமூர்த்தி முன்னிலை வகித்தார். காவேரிப்பட்டணம் எம்.எல்.ஏ., மேகநாதன் விவசாயிகளுக்கு இடுபொருட்களை வழங்கினார். விழாவில் வேளாண் உதவி இயக்குனர் ராஜன் பேசியது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களில் உள்ள விவசாயிகள் பயன் பெறும் வகையில் நடமாடும் ஊர்த்தி மூலம் வேளாண் இடுபொருட்களை அந்தந்த கிராமத்துக்கு எடுத்து சென்று விநியோகம் செய்யும் பொருட்டு சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. காவேரிப்பட்டணம் வட்டாரத்தில் கடந்த ஆண்டு டிசம்பர் 27ம் தேதி முதல் 2011 பிப்ரவரி 15ம் தேதி வரை கிராம அளவிலான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கும் சிறப்பு முகாம் பையூர், சவுட்டஅள்ளி, ஜெகதாப், பனகமுட்லு, கால்வேஅள்ளி, பாரூர், தட்ரஅள்ளி, பென்ட்ரஅள்ளி, பேருஅள்ளி, மருதேரி, பெண்ணேஸ்வரமடம், மோட்டூர்.

சாமாண்டப்பட்டி, நரிமேடு, சுண்டேகுப்பம், கீழ்குப்பம், பண்ணந்தூர் ஆகிய கிராமங்களில் நடந்தது. தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம், விதை கிராம திட்டம், ஐசோபாம் எண்ணெய் வித்து திட்டம், தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம், ஆகிய திட்டங்களில் கீழ் மானிய இடுபொருட்கள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. இதன்படி டி.ஏ.பி., ஜிங்க்சல்பேட், ஜிப்சம், நிலைகடலை, நெல் சான்று விதை விநியோகம், விசைத்தெளிப்பான், கைத்தெளிப்பான். கெட்டார் ராக்கர் தெளிப்பான், தென்னங்கன்று விநியோகம் மற்றும் பயிற்பாதுகாப்பு கிட் ஆகியவை 9,33,220 ரூபாய் மதிப்பில் 1891 பேருக்கு வழங்கப்பட்டது. முகாம் நிறைவு விழாவில் 20 பேருக்கு விசை தெளிப்பானும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல்விளக்கம் 10 பேருக்கும், ஜிப்சம் ஆகியவை மானியத்தில் வழங்கப்படுகிறது. முகாமில் மண் மாதிரி எடுத்தல், மண் ஆய்வின் முக்கியத்துவம் குறித்து செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. வேளாண் அலுவலர் பச்சியப்பன், ராமகவுண்டர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**பசுமை குடில்கள் மூலம் அதிக லாபம்: நபார்டு வங்கி மேலாளர்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,00:06 IST

ஓசூர்: ""பசுமை குடில்கள் அமைத்து ரோஜா மற்றும் காய்கறி சாகுபடியில் செய்தால் நல்ல லாபம் பெறலாம், '' என நபார்டு வங்கி மேலாளர் திருமலை தெரிவித்தார். தேன்கனிக்கோட்டை அடுத்த பென்னங்கூரில் உழவர் மன்ற துவங்க விழா நடந்தது. லீடு வங்கி மேலாளர் திருமாவளவன் தலைமை வகித்தார். நபார்டு வங்கி மேலாளர் திருமலை உழவர் மன்றத்தை துவக்கி வைத்து பேசியதாவது: உழவர்மன்றங்களால் விவசாயிகளுக்கு பல்வேறு பயன்கள் உள்ளது. நாடு முழுவதும் ஒரு லட்சத்து 25 ஆயிரம் உழவர் மன்றங்கள் உள்ளன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 80 உழவர்மன்றங்கள் உள்ளன. இவற்றை 100ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உழவர் மன்றங்கள் மூலம் துல்லிய பண்ணை விவசாயம், பசுமை குடில் விவசாயம் பெருகி வருகிறது. ரோஜா மற்றும் காய்கறிகளை சாகுபடியை பசுமைகுடில் அமைத்து செய்தால் நல்ல லாபம் பெறலாம். உழவர் மன்றங்களுக்கு வங்கிகள் மானியத்தில் கடன் வழங்குகின்றன. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்தி உணவு உற்பத்தியை மேம்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். பசுமை புரட்சி திட்ட இயக்குனர் ஸ்ரீரங்கநாயுடு 250 மகளிர் சுய உதவி குழு பெண்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார். மைராடா திட்ட அலுவலர்கள் நஞ்சாரெட்டி, சங்கர்பிசாத், இந்தியன் வங்கி மேலாளர் பூஜாரி, வேளாண் பிரிவு மேலாளர் வெங்கடேஷ், வேளாண்மை உதவி இயக்குனர் நாகராஜ், மல்லச்சந்திரம் பஞ்சாயத்து தலைவர் மஞ்சுளா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**18 கிலோ எடையில் ராட்சத சேனைக்கிழங்கு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,01:33 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி உழவர் சந்தைக்கு 18 கிலோ எடை கொண்ட ராட்சத சேனை கிழங்கு விற்பனைக்கு வந்தது. கோபி மொடச்சூர் ரோட்டில் உழவர் சந்தை செயல்பட்டு வருகிறது. நாள்தோறும் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், பாரியூர், குருமந்தூர், சிறுவலூர், அய்யம்புதூர், அயலூர், கள்ளிப்பட்டி, அத்தாணி, மேவாணி, கொளப்பலூர், நம்பியூர், வேட்டைகாரன் கோவில் மற்றும் கோபி மற்றும் சுற்று வட்டாரத்தில் இருந்து நாள்தோறும் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். நேற்று காலை வழக்கம் போல் விவசாயிகள் காய்கறிகளை விற்பனைக்காக கோபி உழவர் சந்தைக்கு கொண்டு வந்தனர். அதில், அய்யம்புதூர் பகுதியை சேர்ந்த தர்மலிங்கம் கொண்டு வந்த சேனை கிழங்குகள் மிகப் பெரியதாக இருந்தன.

குறிப்பாக, ஒரு சேனைக் கிழங்கு 18 கிலோ எடை கொண்டதாக இருந்தது. அதிக எடையுள்ள சேனைக் கிழங்கை பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் ஆச்சர்யத்துடன் பார்த்துச் சென்றனர்.

**சொட்டு நீர் பாசனம் ஒரு வாரம் இலவச பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,01:31 IST

ஈரோடு: ஈரோட்டில் வரும் 21 முதல் 28ம் தேதி வரை சொட்டு நீர்ப்பாசனம் குறித்து விவசாயிகளுக்கு இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. வேளாண் பொறியியல் துறை சார்பில், நீர் மேலாண்மையில் சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனத்தின் பயன்பாடு பற்றிய பயிற்சி, ஈரோடு பிரப் ரோட்டில் உள்ள ஈரோடு உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் வரும் 21 முதல் 28ம் தேதி வரை நடக்கிறது. பயிற்சியில் கலந்து கொள்ள 18-45 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். ஆர்வம் உள்ள விவசாயிகள் வரும் 20ம் தேதிக்குள் தங்கள் பெயர்களை முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இத்தகவலை கலெக்டர் சவுண்டையா தெரிவித்துள்ளார்.

**வேளாண்மையில் புதிய தொழில்நுட்பம் நபார்டு வங்கி பொது மேலாளர் பேச்சு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,00:04 IST

லாலாப்பேட்டை: ""வேளாண்மையில் புதிய தொழில்நுட்பம் சேர வேண்டும் என்ற நோக்கத்தில் உழவர் மன்றம் துவங்கப்படுகிறது. புதிய யுக்திகளை கையாண்டு விளைச்சலை அதிகரிக்க வேண்டும்," என்று நபார்டு வங்கி பொதுமேலாளர் பார்த்திபன் பேசினார். தேசிய விவசாய கிராமப்புற வளர்ச்சி வங்கி, வேளாண் அறிவியல் மையம் மற்றும் லாலாப்பேட்டை ஐ.ஓ.பி., சார்பில் நபா ர்டு உழவர் மன்றம் துவக்க விழ õ மகிளிப்பட்டியில் நடந்தது. கூட்டுறவு வங்கி செயலாளர்கள் ராஜ்குமார், செல்வம் முன்னிலை வகித்தனர். சிந்தலவாடி பஞ்சாயத்து தலைவர் யோகபால், வேளாண் அறிவியல் மைய அலுவலர் திரவியம், தொழில்நுட்ப வல்லுநர் அனிதா ஆகியோர் பேசினர். உழவர் மன்றங்களை துவக்கி வைத்து நபர்டு வங்கி பொதுமேலாளர் பார்த்திபன் பேசியதாவது: கிராமப்புற வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளான சாலை, பள்ளிக்கூடம், அணை கட்டுமானம் மாநில அரசின் ஒத்துழைப்போடு நபார்டு வங்கி கடன் வழங்குகிறது. இன்றைய சூழ்நிலையில் விவசாயம் நலிவடைந்து வருகிறது.

விவசாய நி லம் வீட்டுமனைகளாக மாறுகிறது. விவசாய நிலங்களை வீட்டுமனைகளாக ஆக்குவதை அரசு தடுக்க வேண்டும். இன்று விவசாய பணிக்கு ஆள் பற்றாக்குறை என்ற நிலை உருவாகியுள்ளது. விவசாய கடன் பெறுவதிலும் க டினமான நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள்தொகை அதிகரிப்புக்கு ஏற்ப உணவு பற்றாக்குறை அதிகமாகி வருகிறது. செம்மை நெல் சாகுபடி, செம் மை கரும்பு விளைச்சலால் அதிகமான மகசூல் பெறலாம். வே ளாண்மையில் புதிய தொழில்நுட்பம் சேர வேண் டும் என்ற நோக்கத்தில் உழவர் மன்றம் துவங்கப்பட்டுள்ளது. புதிய யுக்திகளை கையாண் டு விளைச்சலை அதிகரிக்க முடியும். இவ்வாறு அவர் பேசினார். லாலாப்பேட்டை ஐ.ஓ.பி., மேலாளர் ஜார்ஜ் பேசுகையில்,""உணவு உற்பத்தி அ திகரித்தால்தான் நாட்டில் பஞ்சம் இருக்கா து. கிராமம் வளர்ச்சி அடைந்தால் தான்நா ட்டின் பொருளாதாரம்உயரும்," என்றார். வ.சி.,உழவர் மன்ற தலைவர் ரமேஷ், காமராஜர் உழவர் மன்ற தலைவர் முருகேசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 16,2011,00:00 IST

**மஞ்சள் பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் கட்டுப்பாடு:** மஞ்சள் பயிரை 25 வகையான பூச்சிகள் தாக்கி சேதப்படுத்துகின்றன. இதில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் கட்டுப்பாடு பற்றி பார்ப்போம். **கிழங்கு செதில் பூச்சி:** இது மஞ்சளைத் தாக்கும் முக்கியமான பூச்சியாகும். மஞ்சள் பயிரை வயல்களிலும் சேமிப்பு கிடங்குகளிலும் தாக்குகிறது. பயிரின் கிழங்குகளின் மேல் கூட்டம் கூட்டமாக இருந்து சாறை உறிஞ்சி செடிகள் வாடி காய்ந்துவிட ஏதுவாகிறது. சேமிப்பு கிழங்குகளைத் தாக்கும்போது கிழங்கின் எடை குறைந்து முளைப்புத்திறன் பாதிக்கப்படுகிறது. **கட்டுப்படுத்தும் முறைகள்:** பூச்சி தாக்கிய இலைகள், தண்டுகள் முதலியவற்றை சேகரித்து அழித்துவிட வேண்டும். பூச்சி தாக்காத நல்ல விதை கிழங்குகளை தேர்வுசெய்து சேகரிக்க வேண்டும். டைகுளோர்வாஸ் 2 மிலி அல்லது மானோகுரோட்டோபாஸ் 15 மிலி/லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து அந்த கலவையில் விதைக்கிழங்குகளை நனைத்து நிழலில் உலர்த்தி பின்னர் நடவுக்கு பயன்படுத்த வேண்டும். நன்கு மக்கிய 10 டன் ஆட்டு தொழு உரத்தை இரண்டாகப் பிரித்து பாதியை உழவு செய்யும்போதும் மீதியை மண் அணைக்கும்போதும் ஒரு எக்டரில் இடவேண்டும். இதனைத் தொடர்ந்து டை மீத்தோயேட் மருந்தை 2 மிலி/லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். விதைக்கிழங்கை குயினால்பாஸ் 2 மிலி/லிட்டர் கரைசலில் அறுவடை செய்தவுடனும், நடுவதற்கு முன் 5 நிமிடமும் நனையவைத்தும் இப்பூச்சி தாக்குதலைக் குறைக்கலாம்.

**கண்ணாடி இறக்கைப்பூச்சி:** தாக்கிய இலைகளில் மஞ்சள் நிற புள்ளிகள் தோன்றி இலைகள் முதலில் வெளிறிய மஞ்சள் நிறமாக மாறி காய்ந்துவிடும். மஞ்சள் கலந்த நிறத்துடன் கண்ணாடி இறக்கையுடன் உள்ள இப்பூச்சிகள் இலையின் அடிப்பகுதியில் கூட்டம் கூட்டமாக

இருந்துகொண்டு சாறை உறிஞ்சி சேதப்படுத்துகிறது. இதனால் இலைகள் காய்ந்துவிடும். இப்பூச்சியைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட இலைகளை பூச்சிகளுடன் சேகரித்து அழிக்க வேண்டும். டைமீத்தோயேட் அல்லது மீதைல் டெமட்டான் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

**இலைப்பேன்:** வெளிர் மஞ்சள் நிறத்தில் குஞ்சுகளும், பழுப்பு நிறத்தில் வளர்ந்த பூச்சிகளும் இலையின் மேல் கூட்டம் கூட்டமாக இருந்துகொண்டு சாறை உறிஞ்சும். இதனால் இலைகள் சுருண்டு வெளிறிய பச்சை நிறத்தில் காணப்படும். தாக்குதல் அதிகரிக்கும்போது இலைகள் காய்ந்துவிடும். இலைப்பேன் வெளிர்மஞ்சள் நிறத்துடன் சீப்புபோல் பிளவுபட்ட இறக்கைகளுடன் காணப்படும். தாய் பூச்சியானது இலைகளில் ஒரு வெட்டுப்பகுதியை உண்டாக்கி அதனுள் முட்டை இடும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்:** பாதிக்கப்பட்ட இலைகளை சேகரித்து அழிக்க வேண்டும். டைமீத்தோயேட் 2 மிலி அல்லது பாசலோன் 2 மிலி மருந்துக்கு 1 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். (தகவல்: கு.கோவிந்தன், வேளாண் பூச்சியியல் துறை, சா.ராஜதுரை மற்றும் தொண்டைமான், தோட்டக்கலைத்துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003).

-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

### மாமரங்களுக்கு நுண்ணூட்டச்சத்துக்களை அடிப்பது அவசியம்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 16,2011,00:00 IST



நெடுங்காலமாக மா விவசாயிகள் தங்கள் மரங்களில் இலைகள் மஞ்சளாகப் போவது, இலைகள் சுருங்கிக் கொள்வது போன்ற பிரச்னைகள் இருக்கும்போது மாமரங்களுக்கு வழக்கமாக உபயோகப்படுத்தும் பூச்சி, பூஞ்சாள மருந்துகளை அடித்தனர். ஆனால் பிரச்னை தீரவில்லை. இந்தப் பிரச்னைகளை ஆராய்ந்து பெங்களூருவில் உள்ள அசர்கட்டா பண்ணை பரிகாரங்கள் கண்டுபிடித்து உள்ளது. மாமரங்களில் தோன்றிய பிரச்னைகளுக்கு நுண்ணூட்டச் சத்து பற்றாக்

குறை அதாவது போரான், ஜிங்க், மாங்கனீஸ், அயர்ன் (இரும்பு) பற்றாக் குறை போன்றவைகள்தான் காரணம் என்று தெளிவுபடுத்தியுள்ளது. இன்று மாமரங்களில் தோன்றும் பலவித பிரச்னை அறிகுறிகள் நிலத்தில் போரான் சத்து இல்லாத காரணத்தினாலேயே ஏற்பட்டு வருகின்றது. பூங்கொத்துகளில் காம்புகள் கருப்பாக போய் பிஞ்சுகள் கொட்டியிருக்கும். அடுத்தது மா இலைகள் சுருங்கி, நெளிந்து, கிண்ணங்கள் விழுந்தது போல் காட்சியளிக்கும். இவைகளெல்லாம் ஏதோ வியாதி என்று நினைத்து அதற்கு மருந்தடித்தும் பயன் ஏதும் ஏற்படவில்லை. பின்னால் நுண்ணூட்டச் சத்துக்களை துல்லியமாக ஆராய்ந்து தேவைப்படும் சத்துக்களைத் தேர்ந்தெடுத்து அதை கலவையாக செய்து மரங்களுக்கு அடித்தபோது மரங்களில் தோன்றிய அறிகுறிகள் மாறி இலைகள் இயல்பான வடிவத்தைக் கொள்ள ஆரம்பித்தன. கிளைகள் செழிப்பாக வளர்ந்தன. பூக்கள் நன்றாக பிடித்தன. மகசூல் அதிகரித்ததோடு, பழங்கள் நல்ல கலரைக் கொண்டன. அவைகள் விரைவில் முதிர்ச்சியடைந்தன. இத்தகைய பழங்கள் பூச்சி, வியாதிகளால் பாதிக்கப்பட்டு தரம் கெடவில்லை. அசர்கட்டா ஆராய்ச்சி நிலையம் மாமரங்களுக்குத் தேவையான கலவையைத் தயார் செய்து அதை ""மேங்கோ ஸ்பெஷல்'' என்று விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகிறது. இதனை நீரில் கலந்து மரங்களின் மேல் தெளித்தபோது மகசூல் கணிசமான அளவில் அதிகரித்து வருகின்றது.

**கலவை தயாரிப்பது எப்படி?:** 5 கிராம் அளவுள்ள கலவையை ஒரு லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டும். இந்த வீதத்தில் தயாரிக்கப்பட்ட 20 லிட்டர் கலவையில், ஒரு எலுமிச்சம் பழச்சாறு பிழிந்துவிட வேண்டும். மற்றும் ஷாம்பூ பாக்கெட்டில் இருக்கும் ஷாம்பூவை ஊற்ற வேண்டும். இந்தக் கலவையை மூன்று தவணையில் மரத்தின் மேல் தெளிக்க வேண்டும். கலவையை அதிக உஷ்ணம் இல்லாத சமயம் அதாவது அதிகாலையில் அல்லது மாலையில் இலைகள் நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். குறிப்பாக பட்டாணி சைஸ் பிஞ்சு இருக்கும்போது கவனித்து செய்ய வேண்டும். கவனம் குறைந்தால் பிஞ்சுகள் கருகும். அசர்கட்டா ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதனை மரங்கள் அதாவது மருந்து தெளித்த மரங்களைப் பார்த்தபோது "மேங்கோ ஸ்பெஷல்' மருந்தின் பயன் துல்லியமாக தெரிந்தது.

அல்போன்சா மற்றும் பங்கனபள்ளி மரங்கள் செழிப்பாக காணப்பட்டன. தெளிக்காத மரங்களைவிட தெளித்த மரங்களில் அறுவடை 2-3 மாதங்களுக்கு முன்னதாக வந்துள்ளது. மேலும் மகசூல் அதிகரிப்பு 20 சதவிகிதம் அளவு இருந்தது.
ஓசூரில் ஐரணபள்ளி கிராமத்தில் பங்கனபள்ளி மரங்களில் எஸ்.கே.சீனிவாசன் என்ற முற்போக்கு விவசாயி பூச்சி மருந்துகளுடன் "மேங்கோ ஸ்பெஷல்' மருந்து கலந்து தெளித்துள்ளார். இவரது மரங்களில் இலைகள் அனைத்தும் செழிப்பாகவும், சுருக்கம் கொள்ளாமலும் இயல்பாக வளர்ந்தன. பூங்கொத்துகளில் பிஞ்சுகள் நன்கு பிடித்திருந்தன. பூங்கொத்துகள் கருப்பு நிறத்தை

அடையவில்லை. பிஞ்சுகள் வளர்ந்து காய்களாக மாறியபோது நல்ல கலரினைக் கொண்டிருந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. விவசாயி மகிழ்ச்சியாக இருக்கிறார்.

**மஹாதேவ கொல்லஹள்ளி கிராமம்:** கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த மஹாதேவ கொல்லஹள்ளி என்ற கிராமத்தில் நர்சரி ஜாம்பவான் எம்.சி.சாந்தகுமார் என்பவர் தனது மரங்களுக்கு புதிய மருந்தினைத் தெளித்து அனுபவத்தை நேரில் விளக்கினார். இவரது நிலம் சுண்ணாம்பு கலந்த மண். இதில் இவர் ஆல்போன்சா தோட்டம் அமைத்துள்ளார். இதில் 10 மரங்களுக்கு மருந்து அடித்து அதன் பலனை ஆராய்ந்தார். இவர் 15 லிட்டர் தண்ணீரில் 150 கிராம் மருந்தினைக் கலந்து ஒரு மரத்திற்கு தெளித்தார். இவர் கீழ்க்கண்டபடி தெளித்தார். முதல் தெளிப்பு, மரங்களில் பூச்சி தோன்றும்போது, இரண்டாம் தெளிப்பு, டிசம்பர் மாதம் கடைசியில், மூன்றாவது தெளிப்பு, மரங்களில் பட்டாணி சைஸ் அளவு பிஞ்சுகள் இருக்கும்போது. இந்த அதிசய மருந்தினை தெளித்தபிறகு மரத்தின் இலை, குருத்து தண்டு, நீளமாகவும், இலைகள் மிகப்பெரியதாகவும், கரும்பச்சை நிறத்திலும் வளர்ந்தன. பூ எடுக்கும் காலத்தில் அதிக எண்ணிக்கையில் பூங்கொத்துக்கள் நீளமாகவும், வீரியத்துடனும் காணப்பட்டன. பிஞ்சுகள் அதிகம் உதிராமல் எண்ணிக்கை அதிகரித்தது.

பூக்கும் தருணத்திலும் காய் பிடிக்கும் தருணத்திலும் பனி, மழை இவைகளைத் தாங்கி ஓரளவிற்கு நோய் தாக்குதலில் இருந்தும் தப்பித்தது. தோட்டத்தில் மருந்து அடித்த மரங்களில் இருந்தும் மருந்து அடிக்காத மரங்களிலிருந்தும் காய்கள் எண்ணப்பட்டன. மருந்து அடிக்காத 10 மரங்களில் மரம் ஒன்றுக்கு சராசரியாக 360 காய்கள் (60-70 கிலோ) காணப்பட்டன. மருந்து அடித்த மரத்தில் சராசரியாக 700 காய்கள் காணப்பட்டன (125 கிலோ). மருந்து அடித்த மரங்களில் காய்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்ததோடு காய்களின் தரமும் சிறப்பாக இருந்தது.மருந்து கிடைக்கும் இடம்: ஏ.டி.ஐ.சி. டிவிஷன் எக்ஸ்டென்ஷன், ஐ.ஐ.எச்.ஆர். அசர்கட்டா லேக் அஞ்சல், பெங்களூரு-560 089.
-எஸ்.எஸ்.நாகராஜன்.

**அதிநவீன ஆக்சிஜன் வெளியிடும் இடுபொருள்-பயோஆக்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 16,2011,00:00 IST

என் பெயர் ஐயப்பன். நான் கடந்த ஜூலை மாதம் 50 செண்ட் சின்ன வெங்காயம் பயிர் செய்தேன். எங்கள் விருதுநகர் விவசாய நிலப்பகுதி மக்கள் வறண்ட பகுதியாதலால் ஏக்கருக்கு அதிக பட்சம் 25 மூடைகள் (75-80 கிலோ மூடை)தான் கிடைக்கும். அடியுரமாக பயோ ஆக்சி அரை கிலோவுடன் ரசாயன உரங்களை சேர்த்து பயன்படுத்தினேன். இதுவரை என் அனுபவத்தில்

கண்டிராத விளைச்சலாகிய 20 மூடை சின்னவெங்காயம் அரை ஏக்கரில் கிடைத்தது. அதாவது 12.5 மூடைகள் கிடைக்க வேண்டிய இடத்தில் 20 மூடைகள் என்றால் 60% அதிக விளைச்சல். ஒரு முறை பயோ ஆக்சி பயன்படுத்தியதற்கே இந்த விளைச்சல் என்றால் இன்னும் 2 முறை பயன்படுத்தி இருந்தால் விளைச்சல் எந்த அளவு அதிகரித்திருக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை. மேலும் நல்ல நிறத்துடன் திடமாக விளைச்சல் உள்ளது. நான் மற்ற பயிர்களுக்கும் பயோஆக்சி பயன்படுத்தி வருகிறேன். மற்ற விவசாய நண்பர்களுக்கும் பரிந்துரை செய்கிறேன்.

**பயோ ஆக்சி பற்றி சிறு விளக்கம்:** இந்திய விவசாயத்துறையில் முதல் முறையாக 100% இயற்கையாக ஆக்சிஜன் வெளியிடும் கனிமங்கள். தொடர்ச்சியாக 6 மாதத்திற்கு ஆக்சிஜனை வெளியிட்டு உயிரற்ற ரசாயன மண்ணையும் உயிருள்ள இயற்கை நல மண்ணாக மாற்றும் அற்புத படைப்பு. 100% இயற்கையானது. சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பானது.

**பயோ ஆக்சியின் பயன்கள்:** விதை முளைப்புத்திறன் அதிகரிக்கிறது. நாற்றின் வளர்ச்சியை ஊக்குவித்து, தரமான நாற்றாக மாற்றுகிறது. மண்ணில் காற்றோட்டம், இரு மண்துகள்களுக்கு இடையில் உள்ள இடைவெளி, நீர்பிடிப்புத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்துகிறது. இதன்மூலம் வேரின் சுவாசத்தையும், வளர்ச்சியையும் அதிகப்படுத்துகிறது. மொத்த நுண்ணுயிர்களையும் அதிகப்படுத்துவதால், அவை மண்ணில் வாழ தேவையான சூழ்நிலையை உருவாக்குவதால் பலவகையான ரசாயன கழிவுகளையும், எச்சங்களையும் எளிதாக சிதைத்து மண்ணோடு மண்ணாக மக்கச் செய்துவிடுகிறது. (ரசாயன உரம், பூச்சி, நோய் மற்றும் களைக்கொல்லியின் கழிவுகள்). மண்ணிலுள்ள மற்றும் மண்ணில் இடும் அனைத்து சத்துக்களும் என்சைம்கள், ஹார்மோன்கள், அமினோ அமிலங்கள் ஹ்யூமஸ், இயற்கை அமிலங்கள் அனைத்தையும் பயிர் எளிதில் முழுவதும் எடுத்துக்கொள்ள வழி செய்கிறது. நிலத்தடி நீரைத் தூய்மைப்படுத்தி, மண்ணில் கார, அமில, உவர்த்தன்மையையும் சரிசெய்து தூய்மையாக்குகிறது. பயிரின் ஒளிச்சேர்க்கையின்போது வேருக்கு அருகில் உள்ள நீருக்கு ஆக்சிஜன் மிகவும் இன்றியமையாததாகையால் பயிரின் உணவு உற்பத்தி நன்கு பெருகி விளைச்சல் அதிகரிக்கிறது. வைரஸ் நோய் தாக்கிய ஆரம்ப நிலையில் வைரஸ் கிருமி அடுத்த நல்ல ஆரோக்கியமான பயிரின் செல்களுக்கு பரவாமல் தடுத்து நோயை ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்துகிறது. களிமண் நிலத்தில் நீர் கடத்துத்திறனை அதிகப்படுத்தி ஆக்சிஜன் மற்றும் சத்துக்கள் பயிருக்கு எளிதில் கிடைக்கும்படி செய்கிறது.

ஏற்கனவே மண்ணில் பல ஆண்டுகளாக தங்கி படிந்துள்ள ரசாயன கழிவுகளையும் எளிதில் மக்க துணைபுரிந்து மண் புதிதாக, தூய்மையான காற்றை சுவாசிக்கும்படி செய்து பயிருக்குத் தேவையான ஆக்சிஜனை தொடர்ந்து அளிக்கிறது. மண்ணில் நன்மை செய்யும் உயிர்களின் புகலிடமாக மாறி, உயிருள்ள இயற்கை மண்ணாக மாற்றுகிறது. பூக்கள், பிஞ்சுகள், கிழங்குகள், தானியங்கள் அனைத்தின் எண்ணிக்கையையும் கணிசமாக உயர்த்துவதால் விளைபொருட்களின்

எடையும் அதிகரிப்பதால், விளைச்சல் 40% முதல் 60% வரை உயர்கிறது. தரம் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கிறது. பயிரின் விளைச்சல் கொடுக்கும் திறனை முழுமையாக வெளிக்கொணர உதவுகிறது.

**பயன்படுத்தும் முறை:** எல்லாப் பயிர்களுக்கும், எல்லாவகை மண் நிலங்களுக்கும் ஏக்கருக்கு 1 கிலோ 6 மாதத்திற்கு ஒரு முறை மணலுடன் கலந்தோ, இயற்கை (அ) ரசாயன உரங்களுடன் கலந்தோ இடலாம். மரப்பயிர்களுக்கும் பழவகை பயிர்களுக்கும் 1 மாதத்திற்கு 3-10 கிராம், பயிர் வயது, மண்வளம் பொருத்து 6 மாதத்திற்கு ஒரு முறை. 7 முதல் 10 நாட்களுக்கு மிகாமல் நீர் பாய்ச்சுவது அவசியம்.

**-ஐயப்பன், மதுரை-625 001. 94878 01515.**

**குறைவான நெல் கொள்முதல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,01:37 IST

ஒத்தக்கடை:மதுரையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் குறைவான அளவே நெல் கொள்முதல் செய்வதால் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர்.
மதுரை மாவட்டத்தில் கடந்த 20 நாட்களுக்கும் மேலாக நெல் சாகுபடி நடந்து வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் நெல்லை கொள்முதல் செய்து பாதுகாக்க போதுமான இடவசதி இல்லை. இதனால், விவசாயிகள் வயல்களிலேயே நெல்லை கொட்டி பாதுகாத்து வந்தனர். மழை பெய்தால் நெல் வீணாகி, விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது குறித்து "தினமலர்' இதழில் செய்தி வெளியானது. இதையடுத்து, கலெக்டர் சி. காமராஜ் உத்தரவுப்படி, நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் பல இடங்களில் நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டன.விவசாயிகள் விரக்தி: ஒத்தக்கடை அருகே புதுதாமரைப்பட்டியில் நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் நெல் கொள்முதல் மையம் திறக்கப்பட்டது. அங்கு ஒத்தக்கடை மற்றும் சுற்று வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் தங்களது நெல்லை குவித்து வைத்து விலைக்காக பல நாட்கள் காத்துள்ளனர். நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் தினமும் சூ. இரண்டு அல்லது மூன்று லட்சம் வரை மட்டுமே நெல் கொள்முதல் செய்கின்றனர்.

இதனால், விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர்.சிட்டம்பட்டியை சேர்ந்த விவசாயி படியான்(65) கூறும்போது ""ஒரு கிலோ நெல் சூ.11க்கு அரசு கொள்முதல் செய்கிறது. 40 கி., எடையுள்ள 150 மூடைகள் கொண்டது ஒரு லோடு. தினமும் இரண்டு லோடுகள் மட்டுமே அரசு கொள்முதல் செய்கிறது. குறைந்தளவு கொள்முதல் செய்வதால் சிறு விவசாயிகள் நெல்லை அரசிடம் விற்க

முடியாமல் பல நாட்களாக காத்திருக்க வேண்டியுள்ளது," என்றார்.வெள்ளரிப்பட்டியை சேர்ந்த விவசாயி சுப்பிர
மணியன் (65) கூறும்போது, ""இங்குள்ள கொள்முதல் மையத்தில் சூ.இரண்டு கோடி மதிப்பில் நெல் குவித்து வைக்கப்பட்டுள்ளது. மழை பெய்தால் நெல்லிற்கு பாதுகாப்பு இல்லை. 13 நாட்களாக இங்கேயே இருக்கிறேன். நெல்லை விற்க இயலவில்லை. தினமும் சூஏழு லட்சம் என்ற அளவில் அரசு கொள்முதல் செய்தால் மட்டுமே சாத்தியம்," என்றார்.

**விதைப்பண்ணைகள் அமைத்து சான்று விதைகள் உற்பத்தி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,00:06 IST

போடி : ""விதைப்பண்ணைகள் அமைத்து சான்று விதைகள் உற்பத்தி செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும்", என விதைச் சான்று உதவி இயக்குனர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது: மாவட்டத்தில் தற்போது நெல் அறுவடை சீசன் துவங்கியுள்ளது. சீசன் முடிவடையும் நிலையில் பயறு வகைகள் சாகுபடி செய்யப்படும். இந்நிலையில் தரமான சான்று விதைகள் விவசாயிகளுக்கு கிடைக்காமல் சிரமப்பட வேண்டியதுள்ளது. இதனை பயன்படுத்தி மற்ற விவசாயிகள் தாங்களாகவே பயறு வகை, விதை உற்பத்தி செய்யலாம். விதை உற்பத்தி செய்யப்படும் விதைப்பண்ணைகளை விதைச் சான்று உதவி இயக்குனர் அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

இதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட உள்ளன. விதைப்பண்ணை மூலம் உற்பத்தி செய்யப்படும் விதைகள் சுத்தம் செய்யப்பட்டு தரமான விதைச் சான்றிளிப்புத் துறையின் மூலம் சான்று வழங்கப்படும். சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வதால் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கும். எனவே விவசாயிகள் விதைப்பண்ணைகள் அமைத்து சான்று விதைகள் உற்பத்தி செய்ய முன்வர வேண்டும், என்றார்.

**தென்காசியில் மானியத்தில் களையெடுப்பு கருவி வழங்கல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,01:09 IST

தென்காசி : தென்காசியில் மானியத்தில் களையெடுப்பு கருவி வழங்கப்பட்டது. தென்காசியில் தமிழ்நாடு அரசு வேளாண்மை பொறியியல் துறையின் வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 20 எச்.பி.வரையிலான சக்தி கொண்ட களையெடுக்கும் கருவி 50 சதவீத மானியத்தில் வழங்கும்

விழா நடந்தது. வேளாண்மை உதவி செயற்பொறியாளர் ஆறுமுகநயினார் களையெடுப்பு கருவியை இலஞ்சியை சேர்ந்த விவசாயி காந்திமதிநாதன் மனைவி சங்கரிக்கு மானியத்தில் வழங்கினார். களையெடுக்கும் கருவியான மினி டிராக்டரின் மொத்த விலை 2 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய். இதில் விவசாயிகளின் பங்களிப்பு தொகை 1 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய். தமிழக அரசின் மானிய தொகை 1 லடசத்து 25 ஆயிரம் ரூபாய் ஆகும்.

**சித்ராபுரத்தில் விதை உற்பத்தி பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,01:02 IST

தென்காசி : சித்ராபுரம் விவசாயிகளுக்கு விதை உற்பத்தி பயிற்சி அளிக்கப்பட்டது. செங்கோட்டை வட்டாரம் சித்ராபுரம் விவசாயிகளுக்கு விதை கிராம திட்டத்தின் கீழ் விதை உற்பத்தி பயிற்சி முகாம் நடந்தது. ஆய்க்குடி சுப்பையா விதை சுத்தி நிலையத்தில் நடந்த இம்முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் தலைமை வகித்து பேசும் போது, தரமான விதை உற்பத்தி செய்வது குறித்தும், விவசாயிகள் வர்த்தக ரீதியில் செயல்பட்டு வேளாண் வருமானத்தை பெருக்கிடுவது குறித்தும் விளக்கினார். விதை சான்று அலுவலர் அசோகன் செயல் விளக்கமாக விதை சுத்தி நிலைய பணிகளை செய்து காட்டினார். ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன், உதவி வேளாண்மை அலுவலர் சந்திரன், செல்வக்குமார் செய்திருந்தனர்.

**கவாத்து பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,03:16 IST

செங்கல்பட்டு:செங்கல்பட்டு அலகு ஊர் காவல் படை கவாத்து பயிற்சி செங்கல்பட்டு செயின்ட் கொலம்பஸ் மேல்நிலைப் பள்ளியில் நடந்தது.படைத் தளபதி முகமது உசேன் தலைமை தாங்கினார். உதவி படைத் தளபதிகள் மதுரை, கன்னியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மண்டல தளபதி மாணிக்கவேல், மாறில அளவில் கிருஷ்ணகிரியில் நடந்த ஊர்காவல் படையினருக்கான விளையாட்டுப் போட்டியில் பங்கேற்றவர்களுக்கும், ஊட்டி ஊர் காவல் படை பயிற்சி மையத்தில் பயிற்சி முடித்த தணிகைவேலுவிற்கும் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டினார். உதவி படைத்தளபதி கன்னியப்பன் நன்றி கூறினார்.

**பாதி விலையில் நெல் விதைகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,03:12 IST

செங்கல்பட்டு:விதை கிராம திட்டத்தின் கீழ், விவசாயிகள் பாதி விலையில் நெல் விதைகளை பெற்றுக் கொள்ளலாம் என, சித்தாமூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகையா தெரிவித்தார்.அவர் கூறியதாவது:சித்தாமூர் வேளாண்மைத் துறை அலுவலகத்தில் "ஆடுதுறை-45' நெல் விதை 6 டன், வெள்ளை பொன்னி விதை 4 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கு 20 கிலோ விதை, மானிய விலையில் வழங்கப்படுகிறது.ஒரு கிலோ 26 ரூபாய் என விற்கப்படும் "ஆடுதுறை-45' ரக நெல்விதை 13 ரூபாய்க்கும், 19 ரூபாய் 70 பைசா விலையுள்ள வெள்ளைப் பொன்னி 9 ரூபாய் 85 பைசாவிற்கும் வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் நேரில் வந்து விதைகளை பெற்றுப் பயனடையலாம்.இவ்வாறு சண்முகையா தெரிவித்தார்.

**மரவள்ளி விலை வீழ்ச்சி விவசாயிகள் ஏமாற்றம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 16,2011,22:47 IST

சிறுபாக்கம் : வேப்பூர், சிறுபாக்கம் பகுதிகளில் மரவள்ளி பயிருக்கு உரிய விலை கிடைக்காததால் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். சிறுபாக்கம், வேப்பூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம் நயினார்பாளையம், செம்பாக்குறிச்சி, வி.கூட்டுரோடு உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட கிராம விவசாயிகள் குங்கும ரோஸ், வெள்ளை ரோஸ், பர்மா உள்ளிட்ட மரவள்ளி பயிரிட்டு வருகின்றனர். ஜனவரி, டிசம்பர் மாதங்களில் அறுவடை செய்து சேலம், ஆத்தூர், ராசிபுரம் பகுதிகளில் இயங்கும் கிழங்கு ஆலைகளுக்கு புரோக்கர்கள் மூலம் விற்று வந்தனர்.

கடந்த ஆண்டு முன் எப்போதும் இல்லாத வகையில் மூட்டை ஒன்று ரூபாய் 600 முதல் 700 வரை விற்பனையானது. நடப்பு ஆண்டில் பெய்த கனமழையில் எஞ்சிய மரவள்ளி பயிரினை மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 200 முதல் 250 வரை கூட வாங்குவதற்கு வியாபாரிகள் முன்வரவில்லை. மரவள்ளி பயிர் முதிர்ந்து அறுவடைக்கு தயாரான நிலையிலும் உரிய விலை கிடைக்காததால் விவசாயிகள் அறுவடை செய்ய முடியாமல் தவித்து வருகின்றனர்.

**அரூர் பகுதியில் கரும்பு அறுவடை ஆட்கள் தட்டுப்பாடு! : செய்ய முடியாமல் விவசாயிகள் திணறல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 16,2011,00:18 IST

அரூர்: அரூர் பகுதியில் விவசாய கூலி ஆட்கள் தட்டுப்பாடு காரணமாக கரும்பை வெட்ட முடியாமல் விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர். விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், நெல், கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பயிர்கள் பிரதானமாக செய்யப்பட்டு வருகிறது. நீர் பாசன வசதி மற்றும் கிணற்று பாசன வசதிகளை கொண்ட அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, மொரப்பூர் ஆகிய பகுதிகளில் 10,400 ஏக்கரில் இந்தாண்டு கரும்பு சாகுபடி செய்யப்பட்டது. இங்கு சாகுபடி செய்யப்படும் கரும்புகள் அரூர் கோபாலபுரம் சுப்பிரமணி சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கொண்டு செல்லப்படுகிறது. இந்த ஆண்டு ஆலையில் கடந்த நவம்பர் 12ம் தேதி முதல் அரவை துவங்கி ஆலை செயல்பட்டு வருகிறது.

நாள் ஒன்றுக்கு இங்கு 2,400 டன் கரும்பு அரவை செய்யப்படுகிறது. ஆலை அரவைக்காக இயக்கும் போது விவசாயிகள், ஆலை அதிகாரிகள் கரும்பு வெட்டும் பணியாளர்கள் ஆகிய முத்தரப்பினர் கலந்து கொண்டு கரும்பு வெட்ட டன் ஒன்றுக்கு முதலில் நவம்பர் மாதத்தில் 250 ரூபாய் என்றும் பின் ஒவ்வொரு மாதமும் 25 ரூபாய ஞூ அதிகரித்துக் கொள்ள வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. இதன்படி கரும்பு நடவு செய்யப்பட்ட பதிவு மூப்பு அடிப்படையில் விவசாயிகளுக்கு கரும்பு வெட்டுவதற்காக ஆணையை (பீல்டு மேன்கள்) ஆலைத்துறை அதிகாரிகள் வழங்கினர். விவசாயத் தோட்டம் பணிகள் முடிந்த பின்பு அடுத்த தோட்டத்துக்கு கட்டிங் ஆர்டர் வழங்க வேண்டும். ஆனால் ஒரே நேரத்தில் ஏராளமான விவசாயிகளுக்கு கட்டிங் ஆர்டர் வழங்கியதால் எல்லா விவசாயிகளும் கரும்பு வெட்ட முற்பட்டதால் ஆட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால், ஒரு டன் கரும்பு வெட்ட 700 ரூபாய் வரை கரும்பு வெட்டும் கூலி பணியாளர்கள் கேட்கின்றனர். மேலும் அவர்களை தோட்டத்துக்கு கொண்டு செல்லும் போக்குவரத்து செலவையும் ஏற்க வேண்டும்.

கரும்பு 11 மாதத்தில் வெட்டினால் தான் குறிப்பிட்ட அளவு மகசூல் கிடைக்கும். தற்போது, கூலி ஆட்கள் தட்டுப்பாடு காரணமாக 14 மாதங்கள் ஆகியும் கரும்பு வெட்ட முடியாமல் விவசாயிகள் பரிதவிக்கும் நிலையுள்ளது. இதனால், நன்கு வளர்ந்த கரும்புகள் காய்ந்து சருகாகும் நிலையும், பிழி திறன் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. கரும்பு வெட்ட ஆட்கள் பற்றாக்குறை ஏற்படுவதற்கு காரணமாக மத்திய அரசின் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தை காரணமாக விவசாயிகள் கூறுகின்றனர். 100 நாள் வேலை திட்டத்தை செப்டம்பர் மாதம் முதல் பிப்ரவரி வரை நிறுத்த

வேண்டும் என்றும் இந்த மாதங்களில தான் விவசாய பணிகள் நடைபெறுவதால் ஆட்கள் தேவைப்படுவதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர். இதே நிலை நீடித்தால் கரும்பு விவசாயிகள் கரும்பை பயிரிட முன்வர மாட்டார்கள் என்றும் வேறு விவசாயத்துக்கு விவசாயிகள் மாறி விடுவார்கள் என்றும் இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அரூர் அன்னை பசுமை பூமி துல்லிய பிள்ளை விவசாய சங்கத்தலைவர் திருமலை கூறியதாவது: தனியார் கரும்பு ஆலைகளான சக்தி சுகர்ஸ், புகளூர் பாரி சர்க்கரை ஆலை போன்ற ஆலைகளுக்கு கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு மண் பரிசோதனை செய்து அதற்கு தேவையான எந்த உரம் இடவேண்டும் என்றும், 1 ஏக்கருக்கு 45 டன் கரும்பு மகசூல் கிடைக்கும் வகையில் ஆலை நிர்வாகம் விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்கிறது. விவசாயிகளுக்கு வட்டியில்லாத கடன், கரும்பு வெட்ட இயந்திரம் ஆகியவற்றை ஆலை நிர்வாகம் செய்து தருகிறது. இதைப்போலவே அரூர் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையும் விவசாயிகளுக்கு மண்பரிசோதனை செய்து ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை, ஐந்து அடி பார் அமைத்து சொட்டுநீர் பாசன வசதி ஆகியவற்றை செய்து கொடுத்து ஆலை நிர்வாகம் சார்பில் கரும்பு வெட்டும் இயந்திரத்தை வாங்கினால் மட்டுமே கரும்பு வெட்டும் பிரச்னைக்கு தீர்வு காண முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

### அறுவடையான மஞ்சளை இருப்பு வைக்கும் விவசாயிகள்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 16,2011,00:57 IST

ஈரோடு: மொடக்குறிச்சி பகுதியில் 10ம் நம்பர் மஞ்சள் அறுவடை துரிதமாக நடக்கிறது. புதிய மஞ்சளை இருப்பு வைப்பதிலேயே விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் மைசூர் சம்பா, எட்டாம் நம்பர், 10ம் நம்பர் ரக மஞ்சள் அதிகம் பயிராகிறது. வரலாறு காணாத அளவில் மஞ்சள் விலை உயர்வால் ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள் சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது. கொடுமுடி, அந்தியூர், பவானி, மொடக்குறிச்சி பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மஞ்சள் அறுவடை இப்போது துவங்கியுள்ளது. ஊஞ்சப்பாளையம் விவசாயி கோவிந்தசாமி கூறியதாவது: ஏக்கருக்கு 1,200 கிலோ விதை மஞ்சள் விதைத்தேன். சாணிக்குப்பை, காம்ப்ளக்ஸ் உரம் ஆகியவை அடியுரமாகவும், டி.ஏ.பி., காம்ப்ளக்ஸ், கோழிக்குப்பை ஆகியவை மேலுரமாக இடப்பட்டது. மஞ்சள் அறுவடையை துவக்கியுள்ளோம். மஞ்சள் அறுவடை பணிக்கு ஆட்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. பெண் கூலியாட்கள் காலை ஏழு மணிக்கு பணியை துவக்கி மதியம் 2.30 மணிக்கு சென்று விடுகின்றனர். கூலியாக 150 ரூபாய் கேட்கின்றனர். ஒரு ஏக்கருக்கு ஆறு ஆட்கள் வீதம் இரு நாட்கள் மஞ்சள் அறுவடை

நடக்கிறது. ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் தற்போது அதிகளவில் புதியரக மஞ்சள் வரத்தாகி கொண்டுள்ளது. விலை நிலையில்லாமல் உள்ளது. மஞ்சள் விலை, இனி எவ்வாறு இருக்கும் என்பதை கணிக்க முடியாது. புதிய ரக மஞ்சள் குவிண்டால் 8,000 ரூபாய்க்குதான் விலை போகிறது. அறுவடையாகும் மஞ்சளை வேகவைத்து, இருப்பு வைக்கவே விவசாயிகள் விரும்புகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**வைகை அணை நீர் நிறுத்தம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 16,2011,02:15 IST

மதுரை: மதுரைக்கு குடிநீர் மற்றும் விரகனூர்-பார்த்திபனூர் இரண்டாவது ஆயக்கட்டு பாசனத்திற்காக வைகை அணையில், பிப்.,9 மாலை 6 மணிக்கு 1065 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. பிப்.,10 ல் 1000, 11 முதல் 800 கன அடி நீர் வெளியேறியது. இதனால் 40 ஆயிரத்து 743 ஏக்கர் பாசன வசதி பெறும். நேற்று மாலை 6 மணிக்கு அணை மூடப்பட்டது. நிலையூர் கால்வாய் மற்றும் ராமநாதபுரம் பாசனத்திற்கு பிப்.,18 ல் தண்ணீர் திறக்க வாய்ப்புள்ளது. நேற்று காலை 6 மணி நிலவரப்படி, முல்லைப்பெரியாறு அணை நீர் மட்டம் 121.60 அடி. கொள்ளளவு 2945 மில்லியன் கன அடி. நீர் வெளியேற்றம் விநாடிக்கு 600 கன அடி. வைகை அணை நீர் மட்டம் 59.51 அடி. கொள்ளளவு 3513 மில்லியன் கன அடி. நீர் வரத்து விநாடிக்கு 277 கன அடி. நீர் வெளியேற்றம் 1060 கன அடி.

**பழப்பொருள் தயாரிப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 16,2011,21:42 IST

கோவை : கோவை வேளாண் பல்கலையில், வணிகமுறையிலான பழப்பொருட்கள் தயாரித்தல் பற்றிய இரண்டு நாள் பயிற்சி வரும் 22ம் தேதி துவங்குகிறது.பழரச பானம், தயார் நிலைபானம், பலவகை பழ ஜாம், உலர வைக்கப்பட்ட பழங்கள், ஊறுகாய்கள், பழப்பார்கள் (புரூட் பார்) மற்றும் ஊறுகனி போன்ற உணவுப்பொருள் தயாரிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆர்வமுள்ளோர் 1,000 ரூபாய் செலுத்தி பெயரை பதிவு செய்துகொள்ளலாம். நேரில் பதிவு செய்து கொள்ள இயலாதோர், "முதன்மையர், வேளாண் இன்ஜினியரிங் கல்லூரி, கோவை' என்ற பெயரில், கோவையில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில் பெறத்தக்க வகையில் வரைவோலை எடுத்து அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை,"தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண் பல்கலை, கோவை-641003' என்ற முகவரிக்கு வரும் 21ம் தேதிக் குள் அனுப்ப வேண்டும். இவ்வாறு, அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாய பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 16,2011,21:34 IST

ஊட்டி : கூடலூர் அருகே எருமாடு ஓணிமூலாவில் விவசாயிகளுக்கு பயிற்சி கூட்டம் நடந்தது. இந்த பயிற்சியில் தேயிலைக்கு நேரடி உரமிடல், கவாத்து செய்தல், தேயிலையில் சிவப்பு சிலந்தி பூச்சி கட்டுப்பாடு, காபி நாற்றங்கால் தயார் செய்தல், குறுமிளகு பயிர் பாதுகாப்பு, மண் பரிசோதனை செய்தல் குறித்து செயல் விளக்கத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில் தோட்ட கலை உதவி இயக்குனர் குணசேகரன், உழவர் பயிற்சி நிலைய துணை வேளாண்மை அலுவலர் ராஜன், காபி வாரியம் கூடலூர் அட்வைசர் நிர்மல் டேவிஸ், உதவி வேளாண்மை அலுவலர்கள் லட்சுமணன், மோகன் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர். தேயிலை செடியை நில மட்டத்திலிருந்து 30 செ.மீ., வரை வெட்டுவது, 30 முதல் 40 செ.மீ., வரை வெட்டுவது அடிக்கவாத்து, 45 முதல் 60 செ.மீ., வரை வெட்டுவது நடு கவாத்து, 60 முதல் 65 செ.மீ., வரை வெட்டுவது மேற்கவாத்து, 65 செ.மீ.,க்கு மேல் வீச்சு கவாத்து என உப்பாசி பயிற்சியாளர் அன்பரசு விளக்கினார்.

**பாக்கு மரங்களில் நோய் விவசாயிகளுக்கு நஷ்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2011,22:27 IST

பந்தலூர் : சேரம்பாடி நாயக்கன் சோலை பகுதியில் பாக்கு விவசாயத்தில் நோய் தாக்குதல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தின் பிரதான விவசாய தொழில்களான தேயிலை, காய்கறி விவசாயம் மட்டுமின்றி கூடலூர், பந்தலூர் சுற்றுவட்டார பகுதிகளில் கேரளா மாநிலத்தில் விளையும் இஞ்சி, வாழை, குருமிளகு, பாக்கு உள்ளிட்ட விவசாய பயிர்களும் விளைவிக்கப்படுகிறது. இதில் சதுப்பு நிலப்பகுதிகளில் தேயிலை தோட்டங்களில் ஊடுபயிராக மேற்கொள்ளப்பட்டுள்ள பாக்கு விவசாயத்தில் தற்போது பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், சேரம்பாடி நாயக்கன் சோலை பகுதியில் பாக்கு மரங்களில் பூக்கள் பூத்து கருகி விடுவதுடன், பாக்கும் நோய் தாக்கி பழுத்து விழுந்து விடுகிறது. இது குறித்து இப்பகுதியினர் தோட்ட கலை துறையினரிடம் பலமுறை தகவல் தெரிவித்தும் கண்டுக்கொள்ளவில்லை. இதனால், நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

**வாழை இலை விலை "கிடுகிடு' வரத்து குறைவு; தேவை அதிகம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2011,22:55 IST

திருப்பூர் : வாழை இலை விலை கடுமையாக உயர்ந்து கொண்டே செல்கிறது. இம்மாதம் முகூர்த்த நாட்கள் அதிகம் இருப்பதால் தேவை அதிகரித்துள்ளது; மிதமிஞ்சிய தேவையால் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. பூ மார்க்கெட் வியாபாரிகள் சங்க செயலாளர் ரத்தினசாமி கூறியதாவது: பனிப்பொழிவு காரணமாக வாழை இலை வரத்து குறைந்து வருகிறது. தேவை அதிகரிப்பால் இலைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வரும் நாட்களில் விலை உயருவதற்கு வாய்ப்பு அதிகம் உள்ளது. தற்போது, கோவை, பெருந்துறை, தூத்துக்குடியில் இருந்து திருப்பூருக்கு விற்பனைக்கு வருகிறது. தினமும் 600 முதல் 650 கட்டுகள் தேவைப்படுகின்றன. ஆனால், 400 கட்டுகளே வரத்தாக உள்ளது. தேவை அதிகம் ஏற்படும் போது, தூத்துக்குடியில் இருந்து கூடுதலாக கொண்டு வரப்படுகிறது.

போக்குவரத்து செலவு அதிகமாவதால் விலை தானாக உயருகிறது.கடந்த வாரம், ஒரு கட்டு வாழை விலை 550; சாப்பாட்டு இலை ஒன்று ரூ2.00; டிபன் இலை 1.50; தலை வாழை இலை 3.00 என விற்பனையானது. நேற்று, பனியின் தாக்கம், விளைச்சல் குறைவு, தேவை அதிகம் உள்ளிட்ட காரணங்களால் வாழை இலை விலை உயர்ந்து காணப்பட்டது. கட்டு வாழை இலை விலை 1,000; சாப்பாட்டு இலை 4.00; டிபன் இலை 2.50; தலைவாழை இலை 5.00 என விற்பனையானது. வரும் நாட்களில் விலை மேலும் அதிகரிக்கவே வாய்ப்புள்ளது. வாழை இலை அறுவடை செய்யும் விவசாயிகள், எதிர்பார்க்காத விலைக்கு விற்பனை செய்வதால் மகிழ்ச்சியில் உள்ளனர். இலையை வாங்கும் மக்கள், விலையை கேட்டு விழி பிதுங்குகின்றனர், என்றார்.

**வறண்ட கண்மாய்கள் விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2011,22:43 IST

வருஷநாடு : கடமலை-மயிலை ஒன்றியத்தில் இந்தாண்டு போதிய மழை இல்லாததால் கண்மாய்கள் வறண்டு கிடக்கின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். கடமலை-மயிலை ஒன்றியத்தில் செங்குளம், ஓட்டனை , அம்மாகுளம், பஞ்சந்தாங்கி உட்பட பத்துக்கும் மேற்பட்ட கண்மய்கள் உள்ளன. கண்மாய்களை நம்பி நூற்றுக்கனக்கான விவசாயிகள் தாக்களி, பீன்ஸ், கத்தரி மக்கச்சோளம் சாகுபடி செய்து வந்தனர். தற்போது இந்தாண்டு மூல வைகையின் உற்பத்தி இடமான வெள்ளி மலை, அரசரடி, நொச்சிஓடை, காந்திக்கிராமம், முத்துநகர், வாலிப்பாறை ஆகிய பகுதிகளில் கடந்த ஆண்டினை விட இந்தாண்டு மழை குறைவாகவே

பெய்துள்ளது. இதனால் வைகை ஆற்றில் வெள்ளம் ஏற்படவில்லை. பெரும்பாலும் சாரல் மழை பெய்ததால் கண்மாய்கள் நிரம்பவில்லை. இதே நிலைமை நீடித்தால் கடமலை-மயிலை ஒன்றியத்தில் உள்ள விவசாயிகளின் கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்துவிடும் நிலை உள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் சிரப்பட்டு வருகின்றனர். கோடை காலங்களில் பொதுமக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு நிலவும் சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. இதில் பெரும்பாலான கண்மாய்கள் தனி நபர் ஆக்கிரமிப்பில் இருந்து வருகின்றன. ஆக்கிரமைப்பினை அகற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**பயறு சாகுபடிக்கு மானியம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 15,2011,22:34 IST

சிவகங்கை : ""கண்மாய் நீரை பயன்படுத்தி உளுந்து, பாசிப்பயறு சாகுபடி செய்ய தேவையான விதைகள் இருப்பு உள்ளன," என, விவசாயத்துறை இணை இயக்குனர் தங்கச்சாமி பாண்டியன் தெரிவித்தார். அவர் கூறியது: பருவமழையால், கண்மாயில் தேங்கியுள்ள நீரை பயன்படுத்தி பயறு சாகுபடி செய்யலாம். ஏக்கருக்கு எட்டு கிலோ பயறு விதைகள் போதும். டிரைகோடெர்மா கிலோவிற்கு 4 கிராம் பூஞ்சான் விதை நேர்த்தி மற்றும் உயிர் உரம் விதை நேர்த்தி செய்து விதைப்பு செய்யவேண்டும். உரிய நீர்ப்பாசன மேலாண்மை முறை, மண் ஆய்வு சிபாரிசுப்படி அடி உரம் இடவும். பூக்கும் பருவத்தில் இரு முறை 2 சதவீதம் டி.ஏ.பி., கரைசலை தெளிக்கவும். இதனால், பயறு திரட்சியாகவும், அதிக மகசூலும் கிடைக்கும். தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தில் பயறு வகை பயிர்களுக்கு டி.ஏ.பி., தெளிக்க எக்டேருக்கு 200 ரூபாய் மானியம் வழங்கப்படும், என்றார்.

*நடப்பு நிதி ஆண்டின் முதல் 9 மாதங்களில் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி 6.6% அதிகரிப்பு*



*எஸ் சனந்தகுமார்*
*கொச்சி*

*நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் (ஏப்ரல்–டிசம்பர்) நாட்டின் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 6.6 சதவீதம் அதிகரித்து 5.13 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. சென்ற முழு நிதி ஆண்டில் இது 6.78 லட்சம் டன்னாக இருந்தது.*

*டாலர் மதிப்பில்...*

*அதேசமயம், டாலர் மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதி 24 சதவீதம் அதிகரித்து 202.86 கோடி டாலராக உயர்ந்துள்ளது. அளவின் அடிப்படையில் ஏற்பட்ட வளர்ச்சியைக் காட்டிலும் இந்த வளர்ச்சி நான்கு மடங்கு அதிகமாகும். இது, இந்திய கடல் உணவு பொருள்களுக்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைத்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது. நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில், 250 கோடி டாலருக்கு கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதி இதில் 81 சதவீதமாகும். எனவே, இந்த ஆண்டில் இலக்கைக் காட்டிலும் ஏற்றுமதி அதிகரிக்கும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இது, மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும். ஏற்றுமதி அதிகரிப்பால், அதிக அளவில் அன்னியச் செலாவணி வருவாயை ஈட்ட முடியும். இதனால், நடப்பு கணக்கு பற்றாக்குறையை கட்டுப்படுத்த முடியும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் இது உந்துசக்தியாக திகழும்.*

*ஐரோப்பிய நாடுகள்*

*இந்தியாவிலிருந்து, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் மற்றும் அமெரிக்காவிற்கு அதிக அளவில் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதியாகின்றன. இந்நாடுகளில், தேவைப்பாடு*

*வியக்கத்தக்க வகையில் அதிகரித்து வருகிறது என்று இந்திய கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் அன்வர் ஹசிம் தெரிவித்துள்ளார். இந்த தேவையை ஈடுகட்டும் வகையில் நம் நாட்டில், மீன் பிடிப்பு பணிகளில் முன்னேற்றம் ஏற்பட்டு, கடல் உணவு பொருள்கள் உற்பத்தி அதிகரித்து வருகிறது.*

*இந்நிலையில், மெக்சிகோ வளைகுடா பகுதிகளில் மீன் பிடிப்பு பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது. இது, இந்திய கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதியாளர்களுக்கு சாதகமாக உள்ளது. இந்தியாவிலிருந்து கடல் உணவு பொருள்களை அதிக அளவில் இறக்குமதி செய்வதில் இரண்டாவது இடத்தில் உள்ள ஜப்பானிலும் தேவைப்பாடு அதிகரித்து வருகிறது.*

*இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் கடல் உணவு பொருள்களில், இறால் மீன்கள் முக்கிய அங்கம் வகிக்கின்றன. இதற்கு அடுத்தபடியாக 'ஸ்குவிட்' எனப்படும் ஊசிக் கணவாய் மீன்கள் அதிக அளவில் ஏற்றுமதியாகின்றன. நம் நாட்டிலிருந்து அதிக அளவில் கடல் உணவு பொருள்களை இறக்குமதி செய்யும் ஐரோப்பாவில் ஊசிக் கணவாய் மீன்களுக்கு தேவைப்பாடு அதிகரித்து வருகிறது. நம் நாட்டில், ஊசிக் கணவாய் மீன்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. இதுபோன்ற காரணங்களால் கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதியில் அமோக வளர்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*இந்நிலையில், இந்திய ரூபாய்க்கு எதிராக அமெரிக்க டாலரின் வெளிமதிப்பு குறைந்து வருவது ஏற்றுமதியில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது.*

*அமெரிக்க டாலர்*

*சென்ற நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், ஒரு அமெரிக்க டாலரின் வெளிமதிப்பு சராசரியாக ரூ.47–ஆக இருந்தது. இது, நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் சராசரியாக ரூ.45–ஆக குறைந்துள்ளது. உதாரணமாக ஒரு நிறுவனம் 100 கோடி டாலர் மதிப்பு ஏற்றுமதி செய்து இருந்தால், சென்ற நிதி ஆண்டில் ரூ.4,700 கோடி கிடைத்து இருக்கும். அதேசமயம், நடப்பு நிதி ஆண்டில் ரூ.4,500 கோடி மட்டுமே கிடைக்கும்.*

*இந்த பாதிப்பை வெளிப்படுத்துகின்ற வகையில், நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், டாலர் மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதி 24 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், ரூபாய் மதிப்பு அடிப்படையில் 19 சதவீதம் மட்டுமே அதிகரித்துள்ளது.*

*மூலப்பொருள்கள்*

*மேலும், கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதியில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கு, மூலப்பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கான உரிமம் பெறுவதில் கடும் கட்டுப்பாடுகள் உள்ளன. மேலும், ஏற்றுமதி கடனிற்கான வட்டி விகிதமும் அதிகமாக உள்ளது. இதுபோன்ற தடைக்கற்கள் அகற்றப்பட்டால், கடல் உணவு பொருள்கள் ஏற்றுமதியில் மாபெரும் எழுச்சி ஏற்படும் என அன்வர் ஹசிம் மேலும் கூறினார்.*